**தினமணி**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.06.2013 A.M**

---

1.10 லட்சம் விவசாயிகளுக்கு ரூ. 82.11 கோடி வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது: ஆட்சியர் தகவல்

ராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரை 1,10,805 விவசாயிகளுக்கு ரூ. 82.11 கோடி நிவாரணமாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டிருப்பதாக ஆட்சியர் க. நந்தகுமார் புதன்கிழமை தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், நயினார் கோவில் மற்றும் கொடிக்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்திலும் வறட்சி நிவாரணம் வழங்குவது குறித்து கூடுதல் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் பேரிடர் மேலாண்மை தணிக்கைத் துறை ஆணையர் ஆசிஸ் சாட்டர்ஜி ஆய்வு செய்தார்.

இது குறுத்து ஆட்சியர் க. நந்தகுமார் தெரிவித்ததாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, தமிழக அரசால் வழங்கப்பட்ட நிவாரணத் தொகை மாவட்டத்தில் உள்ள 131 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக மே 15-ஆம் தேதி முதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை நிவாரணம் பெறாத விவசாயிகள் ஜூன் 10-ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விரைந்து நிவாரணத் தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குப் பின்னர் நிவாரணத் தொகை ராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் திரும்ப ஒப்படைக்கப்படும். இதுவரை 1,10,805 விவசாயிகளுக்கு ரூ. 82.11 கோடி நிவாரணமாகவழங்கப்பட்டுள்ளது என ஆட்சியர் தெரிவித்தார். ஆய்வின் போது மாவட்ட வருவாய் அதிகாரி சோ. விஸ்வநாதன், கூட்டுறவுச் சங்கங்களின் இணை பதிவாளர் ஆரோக்கிய சுகுமார், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செளந்தர்ராஜன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**கண்மாயில் உள்ள ஆழ்குழாய் கிணறுக்கு மின் இணைப்பு: விவசாயிகள் கோரிக்கை**

மித்திரங்குடி கண்மாயில் 2010-இல் அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என கிராம விவசாயிகள் ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுத்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திரங்குடி கிராம விவசாயிகள் சார்பில் ராமன், புதன்கிழமை ஆட்சியரிடம் கொடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

கடந்த 2008-ஆம் ஆண்டு இப்கோ (இந்திய உழவர் உரக்கூட்டு நிறுவனம்) நிறுவனம் மித்திரங்குடி கிராமத்தைத் தத்து எடுத்தது.

இதனைத் தொடர்ந்து 2010-ஆம் ஆண்டு இந்நிறுவனம் மித்திரங்குடி கண்மாயில் விவசாயிகளின் நலன் கருதி சுமார் 300 அடி ஆழத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்து தந்தது. ஆனால், பல முறை கோரிக்கை மனு கொடுத்தும், இதுவரை ஆழ்குழாய் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே விவசாயக் காலங்களில் மோட்டார்களை வாடகைக்கு எடுத்துத் தான் தண்ணீர் பெறப்பட்டு வருகிறது. எனவே மாவட்ட ஆட்சியர் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஆழ்குழாய் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேபோல் பெரியகோட்டை கிராம மக்கள் சார்பில் ஊராட்சி முன்னாள் தலைவர் கு. செல்வம் கொடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

திருவாரூரில் இருந்து காரைக்குடிக்கு அகல ரயில் பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பெரியகோட்டை மற்றும் சிறுகப்பட்டி ஊராட்சிகளுக்கு நடுவில் இந்த ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. ரயில் பாதையில் தற்போது பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உளளது.

இப்பாலத்தின் உயரம் குறைவாக உள்ளதால் கனரக வாகனங்கள் வயல் பகுதிகளுக்கு வந்து செல்ல முடியாத நிலை உள்ளதால், விளைபொருள்களை கனரக வாகனங்களில் ஏற்றிச் செல்லும் வகையில் பாலத்தின் கீழ்பகுதியை ஆழப்படுத்தி பாதை அமைத்துத்தர வேண்டும் என ஆட்சியரிடம் கொடுத்துள்ள மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**ஈஷாவின் மரக்கன்றுகள்  நடும் திட்டம் துவக்கம்**

**ஈஷா யோக மையத்தின் பசுமைக் கரங்கள் திட்டத்தின்கீழ் 40 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் மதுரையில் புதன்கிழமை துவங்கப்பட்டது.**

**உலக சுற்றுச்சூழல் தினத்தின் ஒரு பகுதியாக ஈஷா பசுமைக் கரங்கள் திட்டம், விழிப்புணர்வு நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. ஈஷாவுடன் எல் அண்ட் டி நிறுவனமும் இணைந்து இந் நிகழ்ச்சியை நடத்தின.**

**இந்த (2013) ஆண்டுக்கான மரம் நடும் திட்டத்தில் 40 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.**

**மரம் நடுவதன் மூலம், தமிழகத்தின் பசுமைப் பரப்பை 10 சதவீதம் அதிகரிக்கும் நோக்கத்துடன், பசுமைக் கரங்கள் திட்டத்தை ஈஷா யோக மையம் தொடங்கியது.**

**இதன்படி, இதுவரை 1.7 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு**

**வருகின்றன. 2006 ஆம் ஆண்டில் மூன்று நாளில் 2.5 லட்சம் தன்னார்வத் தொண்டர்களைக் கொண்டு 8.56 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டன.**

**நடப்பு ஆண்டுக்கான மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் துவக்கமாக, மதுரை அரசு அருங்காட்சியகத்தில் மாநகராட்சி துணை ஆணையர் தேவதாஸ் மரக்கன்றை நட்டு துவக்கி வைத்தார். பின்னர், ஈஷா தன்னார்வத் தொண்டர்களின் விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற்றது.**

## நீர்வளத்தை பாதுகாக்க கருவேல் மரங்களை அகற்றும் மாணவர்கள்

மதுரை மாநகரில் நீர்வளத்தை பாதுகாக்கவும், மாணவர்கள் வழிதவறிச் செல்வதை தவிர்க்கும் முகமாக, கோடை விடுமுறையை பயன்படுத்தி 100 மாணவர்கள் அடங்கிய குழு மூலம், சீமைக்கருவேல் மரங்களை அகற்றும் பணி நடைபெற்று வருவதாக, அமெரிக்கன் கல்லூரி செயலாளரும், முதல்வருமான ம.தவமணி கிறிஸ்டோபர் தெரிவித்தார்.

இது தொடர்பாக, அவர் மேலும் கூறியது:

மதுரை மாநகரில் நிலத்தடி நீர் அதள பாதளத்துக்குச் சென்று விட்டது. வண்டியூர் கண்மாய், செல்லூர் கண்மாய் உள்ளிட்ட நீர்நிலைகளும் வறண்டு கிடக்கின்றன. மாநகரின் சுற்றுச்சூழலும் சீர்கெட்டுள்ளது. இதற்கு சீமைக்கருவேல் மரங்களும் முக்கியக் காரணம்.

பயிர்களுக்கு வேலியாகவும், சமையலுக்கு விறகாகவும் பயன்படும் என்று, 1950-களில் ஆஸ்திரேலியாவில் இருந்து சிறிதளவு விதையாக, இது இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டது. அறுபது ஆண்டுகளில் பெருகிப் பரவி, தமிழகம் முழுவதும் இந்த மரங்கள் ஆக்கிரமித்துள்ளன.

இந்த முள் மரம் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில், வேளாண்மைக்கு எதிரான ஆபத்தான நச்சுத் தாவரமாக அறிவிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வேளாண் கண்காட்சியில் மட்டுமே வைக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் வேரோடு பிடுங்கி எறியப்பட்டு, மீண்டும் வளரா வண்ணம் பாதுகாக்கப்படுகிறது. இந்த மரங்கள், தமிழகத்திலுள்ள விளை நிலங்களில் 25 சதவீதத்திற்கு மேல் வளர்ந்து, வேளாண்மையை பாழ்படுத்தி வருகின்றன.

இந்த மரங்களின் வேர்கள் பூமிக்கடியில் 175 அடி நீளம் (53 மீட்டர்) வரை சென்று, நிலத்தடி நீரை உறிஞ்சக் கூடியது. ஆழ வேர் மட்டுமல்லாது, உறுதியான பக்க வேர்களையும் கொண்டு மழை நீரை உறிஞ்சி, நிலத்தடிக்குச் செல்லாமல் தடுக்கிறது.

எந்த நோயினாலும், பூச்சிகளாலும் தாக்க முடியாத, எந்த இடத்திலும் மற்ற தாவரங்களை அழித்துவிட்டு, தான் மட்டும் செழித்துப் படர்கின்ற தன்மை உடையது.

இந்த மரங்கள் மதுரை மாநகரில் உள்ள 100 வார்டுகளிலும் பரந்து விரிந்து வளர்ந்துள்ளன. இதனால், மாநகரத்தின் நிலத்தடி நீருக்கு ஆபத்து உள்ளது.

எனவே, இந்த சீமை கருவேல் மரங்களை அகற்றுவதற்கு, அமெரிக்கன் கல்லூரியின் பசுமை சங்கத்தின் சார்பில், மாணவர்களின் பசுமை நீர் திட்டத்தின் கீழ் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஜூன் 4-ம் தேதி இந்த திட்டத்தை மேயர் வி.வி. ராஜன்செல்லப்பா துவக்கி வைத்தார். கல்லூரியில் அறிவியல் பிரிவு பட்டப்படிப்பு மாணவர்கள் உயிர் வேதியியல் துறை 2-ம் ஆண்டு மாணவர் சி.எம். சாமி தலைமையில் 100 பேர் தனித்தனி குழுக்களாக தினமும் 6 பகுதிகளில், இந்த மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கோடை விடுமுறையில் மாணவர்கள் வழி தவறிச் செல்வதை தடுப்பதுடன், மதுரையை நீர் வளமிக்க மாநகரமாக்குவதை நோக்கமாகக் கொண்டு, இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளோம். ஒருமாத காலத்துக்கு இந்தப் பணி நடைபெறும், என்றார் அவர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.44 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 33.44 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,284 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.54 டி.எம்.சி.

### விவசாயிகளுக்கு இழப்பீடு கோரி மனு

முதுமலை ஊராட்சியில் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளரிடம் தேமுதிகவினர் மனு அளித்தனர்.

கடந்த 20 ஆம் தேதி முதுமலை ஊராட்சியிலுள்ள நாகம்பள்ளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் பெய்த கடும் மழையால் மூன்று விவசாயிகளின் வீடுகள் இடிந்து சேதமடைந்தது. மேலும் வாழை, பாகை உள்பட விவசாயப் பயிர்களும் முற்றிலுமாக சேதமடைந்தன.

இதற்கு இழப்பீடு வழங்கக் கோரி அப்பகுதி மக்கள் வருவாய்த் துறையினரிடம் முறையிட்டனர். ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதையடுத்து தேமுதிக ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன் தலைமையில் நிர்வாகிகள் தியாகராஜன், பாலகிருஷ்ணன், முஜீபு ஆகியோர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடன் கோட்டாட்சியரை ந்தித்து மனு அளிக்க வந்தனர்.

கோட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லாததால், நேர்முக உதவியாளர் இன்னாசிமுத்துவிடம் மனுவை அளித்தனர்.

### அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியது.

தருமபுரியில் புதன்கிழமை தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட சிறப்புப் பேரவைக் கூட்டம் நிர்வாகிகள் விடுதலை விரும்பி, ஆர்.மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டச் செயலாளர் ந.நஞ்சப்பன் எம்எல்ஏ, மாநில பொதுச் செயலாளர் வே.துரைமாணிக்கம், மாவட்ட பொறுப்பாளர் எஸ்.தேவராசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விவசாயக் கடன்கள் அனைத்தும் ரத்து செய்ய வேண்டும். கால்நடைகளுக்கு இலவச தீவனம் வழங்க வேண்டும்.

சாகுபடி புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்க வேண்டும். விவசாயிகளின் விளைப் பொருள்களுக்கு கட்டுபடியான விலை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தென்மேற்குப் பருவமழை: இயற்கை இடர்ப்பாடுகளின் போது விரைவாகச் செயல்பட வேண்டும்: அரசு அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுரை**

எதிர்வரும் தென்மேற்குப் பருவமழையின்போது ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைத் தவிர்க்க, அரசு அலுவலர்கள் விரைவாகச் செயல்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் டி. ஜகந்நாதன்.

தென்மேற்குப் பருவமழை இடர்ப்பாடுகள் குறித்து எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு ஆட்சியர் டி.ஜகந்நாதன் தலைமை வகித்து அலுவலர்களுக்கு அறிவுறுத்தியது:

எதிர்வரும் தென்மேற்குப் பருவமழை முன்னெச்சரிக்கையாக பல்வேறு நடவடிக்கைகளை அனைத்து துறை அலுவலர்களும் மேற்கொள்ளும் வகையில் இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆற்றங்கரை பகுதி, தாழ்வான பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின்போது மீட்பு நடவடிக்கைளை விரைவாக மேற்கொள்ள வேண்டும். மாவட்டங்களில் உள்ள அனைத்து மழை மானிகளையும் ஆய்வு செய்து அவை முறையாக செயல்படுகிறதா என்பதை வட்டாட்சியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

இயற்கை இடர்பாடுகளின்போது அதற்கென ஒரு குழுவை நியமித்து நிவாரணப் பணிகளை முழு வீச்சில் மேற்கொள்ள வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்கு தேவையான இடங்களை தேர்வு செய்து, அங்கு மின்வசதி, குடிநீர், பாதை வசதி, கழிப்பிட வசதி, ஆகியவை உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திட வேண்டும்.

இதற்காக சத்துணவு மையங்கள், சமுதாயக்கூடங்கள் போன்றவற்றை பராமரிப்பு செய்திட வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு வழங்கத் தேவையான அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்றவை இருப்பு உள்ளதா என்பதை கண்காணித்திட வேண்டும்.

பெரிய ஏரிகள், குளங்கள், மற்றும் பெரிய ஓடைகளில் தூர் வாரப்பட்டு மழை காலங்களில் மழை நீர் எவ்வித தடங்கலும் இல்லாமல் செல்கின்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்காக அவற்றின் அருகேயுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். ஏரிகளில் சிறு, சிறு வெடிப்புகள் ஏதும் கண்டறியப்பட்டால் அவைகளை உடனடியாக சரி செய்திட வேண்டும்.

மீட்புப் பணிகளுக்குத் தேவையான வாகனங்கள் நல்ல நிலையில் உள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். சாலைகளில் உள்ள வலு குறைந்த பாலங்களை நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் பார்வையிட்டு சரி செய்திட வேண்டும். அவசர காலங்களில் தேவையை கருதி மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வெள்ள அபாய காலங்களில் ஏற்படும் தொற்று நோய்களை தடுப்பதற்கு தேவையான அனைத்து உயிர் காக்கும் மருந்துகள், அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான அளவு இருப்பு வைத்திட வேண்டும். அவசர ஊர்திகள் நல்ல நிலையில் உள்ளனவா என்பதை ஆய்வு செய்யவேண்டும்.

அதோடு துறையில் உள்ள இதர வாகனங்கள் நல்ல நிலையில் இயக்கத்தக்க வகையில் வைத்திருக்க வேண்டும். மழைக் காலங்களில் மின் கம்பங்கள் சாய்ந்தாலோ, மின் வயர்கள் அறுந்து விழுந்தாலோ அவைகளை போர்க் கால அடிப்படையில் சரி செய்திட முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திட வேண்டும். கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு உடனடி சிகிச்சை அளித்திட தேவையான மருந்து மாத்திரைகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வெள்ளம், புயல் காலங்களில் மக்களுக்குத் தேவையான உடனடி வசதிகளை போர்க் கால அடிப்படையில் செய்து தருகின்ற வகையில் அனைத்துத் துறை அலுவலர்களும் தயார் நிலையிலிருந்து பணியாற்றிட வேண்டும் என்றார் ஆட்சியர் டி.ஜகந்நாதன்.

மாவட்ட வருவாய் அலுவலர் செங்குட்டுவன், நாமக்கல் சார் ஆட்சியர் அஜய் யாதவ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செங்கோட்டையன் உள்பட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மரக்கன்று நடும் விழா**

சுற்றுசூழல் தினத்தையொட்டி, ஒசூரில் மரக்கன்றுகள் நடும் விழா புதன்கிழமை நடைபெற்றது.

ஒசூர் டி.எஸ்.பி. அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒசூர் 2-வது குற்றவியல் நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார் மரக்கன்றுகளை நட்டார்.

மாவட்ட எஸ்.பி. செந்தில்குமார், ஒசூர் டி.எஸ்.பி. கோபி மற்றும் காவல் ஆய்வாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தேக்கு, சில்வர் உட், வேம்பு உள்ளிட்ட மரக்கன்றுகள் நகரிலுள்ள தெருக்களில் நடப்பட்டன.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது**

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை குறைந்தது.

கடந்த சில மாதங்களாக மேட்டூர் அணைக்கு போதிய நீர் வரத்து இல்லாததால், அணை

வறண்டு காணப்பட்டது. மேலும், அணைக்கு வரும் நீரின் அளவு 100 கனஅடிக்கும் குறைவாகவே இருந்து வந்தது.

இந்த நிலையில், கடந்த வாரம் தமிழகம்- கர்நாடகம் எல்லையில் காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழையால், மேட்டூர் அணைக்கு கடந்த இரண்டு நாள்களாக 1,600 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில், காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை நின்றதால், அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக குறைந்து புதன்கிழமை காலை நீர்வரத்து 454 கன அடியாகக் குறைந்தது.

புதன்கிழமை அணையின் நீர் மட்டம் 18.85 அடியாக இருந்தது. குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து வினாடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 3.77 டிஎம்சி.

![தினமலர்]

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.06.2013 A.M**

---

## மழை வளம் செழித்தால் நீர் வளம் பெருகும்

ஊட்டி:"மலை மாவட்டத்தில் மழை வளம் செழித்தால் மட்டுமே, சமவெளி பகுதிகளில் நீர் வளம் பெருகும்' என, தெரிவிக்கப்பட்டது.

உலக சுற்றுச்சூழல் தினமான நேற்று, "சிந்தித்தல், உண்ணுதல், சேமித்தல்' என்ற கருத்தை கடைபிடிக்க, ஐ.நா., சபை

அறிவுறுத்தியுள்ளது. அதன்படி,

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடந்தன.

வறண்டு போகும் நீர் தொட்டி

* நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கலாசார சேவை அறக்கட்டளை (நெஸ்ட்) சார்பில், ஊட்டி பெத்லகம் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், ஐந்து லாந்தர் ஆட்டோ ஸ்டாண்டு பகுதியில் நிகழ்ச்சி நடந்தது. ஊட்டி பிங்கர்போஸ்ட் விவேகானந்த

புரம் பகுதியில் நடந்த மரம்

நடு விழாவில், "நெஸ்ட்' அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் சிவதாஸ் பேசியதாவது:

"தென்னகத்தின் நீர் தொட்டி' எனப்படும் நீலகிரியின் மழை வளம் தான் கோவை, திருப்பூர் என சமவெளி பகுதி மக்களின் தாகம் தீர்க்க உதவி செய்து கொண்டிருக்கிறது. சமீபகாலமாக, நீலகிரியில் மழை வளம் மெல்ல, மெல்ல குறைந்து, உள்ளூர் மக்களே தண்ணீருக்கு தாளம் போட வேண்டிய நிலையுள்ளது. மழைநீரை சேமித்து வைக்கும் தன்மை கொண்டு புல்வெளிகள், சதுப்பு நிலங்கள் அதிகளவில் உள்ள போதும், அவை மெல்ல, மெல்ல அழிந்து வருகின்றன. விளை நிலங்கள், "கான்கிரீட்' காடுகளாக மாறி வருகின்றன. எனவே, மலை மாவட்ட மண்ணை பாதுகாத்தால் மட்டுமே, எதிர்கால வறட்சியில் இருந்து தப்ப

முடியும்," என்றார்.

## "உணவை வீணாக்க கூடாது'

குன்னூரில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு "உணவை வீணாக்க கூடாது' என்பதை வலியுறுத்தி, விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

குன்னூர் ஒய்.எம். சி.ஏ., மற்றும் "ஏ4ஜெ' அமைப்பு சார்பில்,

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி குன்னூர் பஸ் ஸ்டாண்டில் நடந்தது. "மக்கள் உணவை வீணாக்க கூடாது' என்பதை

வலியுறுத்தி, சென்னை கிறிஸ்டியன் கல்லூரி மாணவர்கள் வீதி நாடகம் நடத்தினர். மேலும், இதை வலியுறுத்தி துண்டு

பிரசுரங்களை வினியோகித்தனர். ஒய்.எம்.சி.ஏ., செயலாளர்

பிரேமானந்த் கூறுகையில்,

""உலகில் தினமும் 5 வயதுக்கு உட்பட்ட 17 ஆயிரம் குழந்தைகள் உணவின்றி இறக்கின்றனர்; இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலகில் 300 கோடி மக்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது; இந்தியாவில் 1960ம் ஆண்டுக்கு பிறகு ஆண்டுதோறும் 50 ஆயிரம் கோடி ரூபாய் அழுகும் மற்றும் அழுகாத உணவு பொருட்களினால் இழப்பு ஏற்படுகிறது; உணவு வீணாக்குவதை தவிர்த்தால் 300 கோடி மக்களின் உணவு பற்றாக்குறையை நீக்கலாம். இதை வலியுறுத்தி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த நிகழ்ச்சி

நடத்தப்பட்டது," என்றார். நிகழ்ச்சியை குன்னூர் இன்ஸ்பெக்டர் மணி துவக்கி வைத்தார். ஒய்.எம்.சி.ஏ., தலைவர் ஜெய

சீலன், சென்னை கிறிஸ்டியன் கல்லூரி மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

## மழை பாதிப்புக்கு அழைக்க 1077 இலவச எண் 24 மணி நேரமும் தகவல் தர அறிவுறுத்தல்

தஞ்சாவூர்: "தென்மேற்கு பருவமழையையொட்டி, பேரிடர் கால இடர்ப்பாடு குறித்து, 1077 எனும் இலவச ஃபோன் எண்ணில், 24 மணி நேரமும் தகவல் தரலாம்' என, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

தஞ்சை கலெக்டர் அலுவலக வளாகத்திலுள்ள ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில், தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணி குறித்து, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடந்தது. இதில் கலெக்டர் பாஸ்கரன் தலைமை வகித்து பேசியதாவது:

தென்மேற்கு பருவமழை நடப்பு மாதம் (ஜூன்) துவங்கி, செப்., மாதம் நிறைவடையும். தற்போது தென்மேற்கு பருவமழை துவங்குவதற்கான அறிகுறிகள் தென்படுகிறது. இதனால் மழைக்காலங்களில் பேரிடர் மேலாண்மை குறித்து, அனைத்து முன்னேற்பாடு எடுக்க வேண்டியது

அவசியம். வருவாய் கோட்ட அளவிலும், அனைத்து வட்டார அளவிலும், உள்ளாட்சி பிரதிநிதிகள், அலுவலர்களை ஒருங்கிணைத்து பேரிடர் மேலாண்மை குறித்து ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்த வேண்டும்.

கலெக்டர் அலுவலகத்தில் ஃபோன், பேக்ஸ், இணைப்புகளுடன் கூடிய கண்ட்ரோல் ரூம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு, 24 மணி நேரமும் சுழற்சி முறையில் தலா, மூன்று ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மழைக்காலங்களில் இடி, மின்னல் தாக்குதல், எதிர்பாராத ஆபத்து உள்ளிட்டவை குறித்து, 1077 என்னும் இலவச ஃபோன் எண்ணில் தொடர்பு கொண்டு மக்கள் தகவல் தரலாம்.

இதேபோல, தீயணைப்புத்துறையினர் மக்கள் அதிகளவில் அவசர கால மீட்பு நடவடிக்கைகளை குறித்து மாதிரி ஒத்திகை நிகழ்ச்சி மூலம், மக்களிடையே பேரிடர் மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ரப்பர் படகுகள் உள்ளிட்ட மீட்பு உபகரணங்களை தீயணைப்புத்துறையினர் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மழை, வெள்ளம் ஏற்படும் காலத்தில் பாதுகாப்பாக மக்களை தங்க வைக்க பள்ளி கட்டிடங்கள், சமுதாய கட்டிடங்கள், திருமண மண்டபங்களை வருவாய்த்துறையினர் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். குடிநீர், மின்வசதி உள்ளிட்ட வசதிகள் குறித்து, முன்கூட்டியே ஆய்வு செய்ய வேண்டும். நீர் நிலைகளிலுள்ள ஆக்ரமிப்பு அகற்ற வேண்டும். போதுமான அளவு சவுக்கு கம்புகள் மற்றும் மணல் மூட்டைகளை இருப்பில் வைக்க வேண்டும்.

மழைக்காலத்தில் சாலையின் குறுக்கே விழும் மரங்கள், மின்கம்பங்களை அகற்ற நெடுஞ்சாலைத்துறையினர், மின்வாரிய பணியாளர்கள் உடனே அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் உயிர்காக்கும் மருந்துகள், போதுமான அளவு இருப்பு வைக்க வேண்டும். அவசர ஊர்திகள் உள்பட உயிர்காக்கும் சாதனங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

தொற்றுநோய் தடுப்பு முகாம் நடத்த வேண்டும். எதிர்பாராமல் மனித, கால்நடை உயிரிழப்பு ஏற்பட்டால், உடனடியாக உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பேரிடர் மேலாண்மை பணியை குறையின்றி மேற்கொள்ள அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.

## விவசாயிகள் விரும்பும் வீரிய ரக விதை நெல் விற்பனை செய்யப்படுமா

கம்பம்:விவசாயிகள் விரும்பும் வீரிய ரக விதை நெல் விற்பனையை விவசாயத்துறையினர் மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளின் விருப்பத்தை, அரசுக்கு பரிந்துரை செய்ய அதிகாரிகள் முன்வர வேண்டும்.இரண்டாவது பசுமை புரட்சி ஏற்படுத்த வேண்டும் என்று, முதல்வர் விவசாயத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உழவர் விழாக்கள் நடத்தப்படுகிறது. 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனம், உரம், பூச்சி மருந்துகள் வழங்கப்படுகிறது.கம்பம் பள்ளத்தாக்கில், கடந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை தவறியதால், முதல் போகம் கைவிடப்பட்டது. இந்த ஆண்டு, திட்டமிட்டபடி தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ளது. கம்பம் பள்ளத்தாக்கில் இதமான சூழல் நிலவுகிறது. சாரல் ஆரம்பித்து விட்டது.விவசாயிகள் உழவுப் பணியை துவக்கிவிட்டனர்.நாற்றுகள் வளர்க்க ஆயத்த பணிகளில் இறங்கியுள்ளனர்.இந்நிலையில்,விவசாயத்துறையினர் வழக்கம் போல ஏடிடி 45, 39 ரகங்களை வாங்கி கொள்ள அழைப்பு விடுத்துள்ளது. ஆனால், விவசாயிகள் கோக்நாத் 505, 509 போன்ற வீரிய ரகங்களை விரும்புகின்றனர். இரண்டிற்கும் விலை கடுமையான வித்தியாசம் உள்ளது. இருந்த போதும் விவசாயிகள் பயன்படுத்தாத ரகங்களுக்கு மானியம் தந்து பயன் என்ன. விவசாயிகள் விரும்பும் வீரிய ரகங்களை வழங்க முதல்வருக்கு, விவசாயத்துறை அதிகாரிகள் பரிந்துரை செய்ய வேண்டும். விவசாயிகள் கூறுகையில், ""வீரிய ரகங்களை கடந்த சில ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறோம். வயல்களில் சோதனை ஓட்டத்திற்கு வீரிய ரகங்களை விவசாயத்துறை அதிகாரிகள் பயன்படுத்துகின்றனர். ஆனால் லோக்கல் ரகங்களை விற்பனை செய்கின்றனர். இந்த முரண்பாடு எதற்காக. விவசாயிகள் விரும்பும் வீரிய ரகங்களை விற்பனை செய்ய முன்வர வேண்டும்.இது தொடர்பாக முதல்வருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்'' என்கின்றனர்.வீரிய ரக விதைகள் கிலோவிற்கு 220 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகள் நிவராண தொகை வங்கி சேமிப்பு கணக்கில்

திருவாடானைநு:திருவாடானை தாலுகாவில் வறட்சி நிவாரண தொகை நேரடி பட்டா உள்ளவர்களுக்கு வழங்கபட்டு வருகிறது. இந்நிலையில் 10ந் தேதிக்குள் அனைவரும் தொகையை பெற வேண்டும். இல்லையென்றால், மத்திய கூட்டுறவு வங்கியில் பணம் திரும்ப ஒப்படைக்கபடும், என கலெக்டர் உத்தரவிட்டதால், விவசாயிகள் கூட்டம் சங்கங்களில் அதிகரித்துள்ளது. நேற்று பட்டுவாடா நிறுத்தம் செய்யபட்டு, தொகையை விவசாயிகளின்

சேமிப்பு கணக்கில் போட முடிவு செய்யபட்டுள்ளது. இது குறித்து கூட்டுறவு அலுவலர் கூறியதாவது: விவசாயிகளுக்கு வழங்கபடும் தொகையை அவர்களின் சேமிப்பு கணக்கில் போட்டுவிடவும், பிரச்னைக்குறிய தொகையை முறையாக விசாரணை செய்து 10ம் தேதிக்குள் வழங்கிவிட்டு மீதி தொகையை திரும்ப ஒப்படைக்கவேண்டும், என்று மாவட்ட கூட்டுறவு தலைமை அலுவலகத்திலிருந்து உத்தரவிடப்பட்டுள்ளது, என்றார்.

## மாவட்டத்தில் குடிநீர் பிரச்னைக்கு ரூ.27 கோடி வறட்சி நிவாரணம்

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க மாவட்ட நிர்வாகம் 27 கோடி ரூபாய் வறட்சி நிவாரணம் அரசிடம் கோரியுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் பருவமழை பொய்ப்பால், எப்போதும் இல்லாத அளவிற்கு ராமநாதபுரம், கமுதி, முதுகுளத்தூர், திருவாடானை, தொண்டி, சாயல்குடி உள்ளிட்ட பல பகுதிகளில் கண்மாய்கள், குளங்கள், ஊரணிகளில் நிலத்தடி நீர் மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இதனால், நிலத்தடி நீர் மட்டமும் அதலபாதளத்திற்கு சென்றுவிட்டது. வறட்சியால் மாவட்டத்தின் பல பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வறட்சியை சமாளிக்கும் வகையில் போர்வெல், கிணறு உள்ளிட்ட குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் 27 கோடி ரூபாய் அரசிடம் வறட்சி நிவாரணம் கோரியுள்ளது. இதற்கிடையில், மாநில பேரிடர் மேலாண்மை நிவாரண நிதி மூலம் 2 கோடியே 4 லட்ச ரூபாய் செலவில் குடிநீர் மேம்படுத்தும் பணி நடந்து வருகிறது. இதன்படி, திருவாடானையில் 6, ஆர்.எஸ்., மங்கலத்தில் 5, நயினார்கோவிலில் 2, போகலூரில் 3, பரமக்குடியில் 4, முதுகுளத்தூரில் 5, கமுதியில் 4, கடலாடியில் 2 என, 31 இடங்களில் ஆழ்துளை கிணறுகள் 77.30 லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. திருப்புல்லாணி 2, திருவாடானையில் 3, ஆர்.எஸ்., மங்கலத்தில் 6, போகலூரில் 2, கடலாடியில் 2 என, மொத்தம் 15 இடங்களில் திறந்த வெளி கிணறுகள் அமைக்க 24.40 லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ளன. அதேபோல், போர்வெல் போட்டு மின்விசை பம்பு மூலம் குடிநீர் தொட்டி மூலம் குடிநீர் வழங்குவதற்கு 73.80 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குடிநீர் குழாய் விரிவாக்க பணிகளுக்கு 27.50 லட்ச ரூபாய், கமுதியில் ஒரு போவெல்லிற்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் செலவில் அமைக்கப்படவுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 76 இடங்களில் 2 கோடியே 4 லட்ச ரூபாய் செலவில் குடிநீர் மேம்படுத்தும் பணி கடந்த ஒரு மாதமாக நடந்து வருகிறது. தவிர, மாவட்டத்தின் சில ஊராட்சி பகுதியில் ஊராட்சி நிர்வாகமே லாரிகள் மூலம் குடிநீர் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## கடும் வறட்சியால் விவசாயிகள் கண்ணீர் சிவகங்கை அருகே வாடும் கடலை செடிகள்

சிவகங்கை:சிவகங்கை, அருகே சாலூரில் கடும் வறட்சியால், கிணற்றில் நீர் இன்றி, விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். சிவகங்கை-மேலூர் ரோட்டில் 12 கி.மீ., துாரத்தில் சாலுார் ஊராட்சி உள்ளது.மேல, கீழ சாலுார், பெருமாள்பட்டி, பாப்பாகுடி, சிவப்பட்டி, மதுக்கரைபட்டி உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன. இம்மக்களின் தொழில் விவசாயம். இங்குள்ள 1,500 ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் மிளகாய், கத்தரி, கீரை, கருணை கிழங்கு, கரும்பு, நெல், வாழை பயிரிட்டு, அறுவடை செய்வது வழக்கம். கிணற்று பாசனத்தை நம்பி இங்கு, விவசாயம் நடக்கிறது.வறட்சி: கடந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால், சாலுாரில் உள்ள கிணறுகள் வறண்டுவிட்டன. மானாவாரியாக விவசாயம் செய்ய, போதிய மழையும் பெய்யவில்லை. தற்போது 300 ஏக்கருக்கும் குறைவாகவே, விவசாயிகள் கத்தரி, வெண்டை, கீரை வகைகள், வாழை உள்ளிட்டவற்றை நடவு செய்துள்ளனர். அவற்றிற்கும் கிணற்றில் நீரின்றி, கருகி வருகின்றன. விவசாயம் செய்ய முடியாத நிலையில், சாலுாரில் நிலங்கள் வறண்டு காட்சியளிக்கின்றன. இதன் காரணமாக,சிவகங்கை பிற மாவட்டங்களுக்கு செல்லும் காய்கறி வரத்தும் குறைந்துவிட்டன. சிவப்பட்டி விவசாயி மண்டையன் கூறுகையில்,"" கிணற்று நீரை நம்பி தான் விவசாயம் செய்தோம். கடும் வறட்சியால், நீர்மட்டம் 300 அடிக்கும் கீழே சென்றுவிட்டது. கிராமத்தில் உள்ள பெரும்பாலான கிணறுகள் வற்றி விட்டன. இங்கிருந்து பல மாவட்டங்களுக்கு காய்கறிகளை அனுப்பினோம். இன்றைக்கு அனுப்ப காய்கறிகளே விளைச்சல் இல்லை. கடும் வறட்சியால், விவசாயிகள் தவிக்கிறோம்," என்றார். சாலுார் கீரை விவசாயி பி.போஸ் கூறுகையில்,"" இங்கு, 12 வகையான கீரைகள் விளைகின்றன. ஆரம்பத்தில் 300 ஏக்கரில், விவசாயிகள் கீரைகளை விளைவித்தனர். கிணற்றில் நீர் வற்றியதால், கீரை நடவு பரப்பும் குறைந்துவிட்டது. நாள் ஒன்றுக்கு இங்கிருந்து, 2 ஆயிரம் முடி கீரை கட்டுகள் விற்பனைக்கு சென்றது. ஆனால், தற்போது நிலவும் வறட்சியால், கீரை விளைச்சல் இன்றி, 500 முடிகள் கூட செல்வது இல்லை. கீரை மற்றும் கடலை செடிகள் பருப்பு விளையும் தருவாயில் கருகி விட்டன. அரசு எங்கள் ஊர் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்," என்றார்.

## கால்நடைகளுக்கு தண்ணீர் தொட்டி திறக்கப்படுமா? கிராம மக்கள் எதிர்பார்ப்பு

ஸ்ரீபெரும்புதுார்:போந்துார், செங்காடு ஆகிய கிராமங்களில், கால்நடைகளின் வசதிக்காக, தண்ணீர் தொட்டிகள் திறக்க வேண்டும் என, கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஸ்ரீபெரும்புதுார் ஒன்றியத்தில், சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கப்பட்ட பின், விளை

நிலங்கள் குறைந்து காணப்படுகிறது.

விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால், இப்பகுதியில், பெரும்பாலானோர், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பேரிஞ்சம்பாக்கம், கீவளூர், பாப்பான்குழி, செங்காடு, குணகரம்பாக்கம் போன்ற கிராமங்களில், தற்போது, தமிழக அரசின் இலவச கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. என, 19 கிராமங்களில் இலவச கறவை மாடுகள் வழங்கப்பட்டன.

இவைகள், அந்தந்த பகுதிகளில் உள்ள குளம், குட்டை போன்ற நீர் நிலைகளை பயன்படுத்தி வந்தன. தற்போது, கோடை காலத்தை முன்னிட்டு, அனைத்து நீர்நிலைகளும் வறண்டு காணப்படுவதால், கால்நடைகள் போதிய நீரின்றி தவித்து வருகின்றன.

இதற்கு தீர்வாக, கடந்த மாதம், மாவட்ட நிர்வாகம் சார்பில், இருங்காட்டுகோட்டை, தண்டலம் ஆகிய கிராமங்களில், கால்நடைகளின் வசதிக்காக, தண்ணீர் தொட்டி திறக்கப்பட்டது.

இதேபோல், போந்தூர், செங்காடு ஆகிய கிராமங்களில் உள்ள கால்நடைகளின் நலன் கருதி, அப்பகுதியிலும் தண்ணீர் தொட்டி திறக்க, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உயர்வு! நெல் வரத்து நின்றதால் அரிசி விலை மீண்டும்... டிசம்பர் மாதம் வரை ஏறுமுகம் தான்?

திருத்தணி:ஆந்திர மாநிலத்தில் இருந்து நெல்வரத்து நின்றதாலும், மின்வெட்டு, போதிய மழை இல்லாததாலும், மாவட்டத்தில் அரிசியின் விலை மீண்டும் உயர்ந்து உள்ளது. கடந்த இரண்டு மாதத்தில், 25 கிலோ மூட்டைக்கு, 200 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

மாவட்டத்தில், 150 அரிசி ஆலைகள் உள்ளன. தமிழகம் மற்றும் ஆந்திர மாநில பகுதிகளில் இருந்து, சூப்பர் பொன்னி, வெள்ளை பொன்னி, பாபட்லா பொன்னி, ஏ.டி.டி., 37 (குண்டு நெல்), ஏ.டி.டி., 45, ஏ.டி.டி., 39 ஆகிய நெல் ரகங்களை கொள்முதல் செய்து ஆலைக்கு கொண்டு வருகின்றனர். பயிர் செய்யவில்லை குறிப்பாக, தமிழகத்தில் தஞ்சாவூர், மன்னார்குடி மற்றும் ஆந்திர மாநிலம், நெல்லூர், மிரியளுகுண்டா, நாயுடுபேட்டை, காளஹஸ்தி ஆகிய பகுதிகளில் இருந்து அதிகளவில் நெல் கொண்டு வரப்படுகிறது.பின்னர், நெல்லை அரைத்து, 25 கிலோ கொண்ட சிப்பங்களாக தயார் செய்து, திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை, திருவாலங்காடு, பொதட்டூர்பேட்டை, அத்திமாஞ்சேரிபேட்டை, சோளிங்கர், அரக்கோணம் மற்றும் அதை சுற்றியுள்ள, 150க்கும் மேற்பட்ட பகுதிகளில் உள்ள அரிசி கடைக்காரர்களால், ஓட்டல்கள் மற்றும் வீடுகளுக்கு வினியோகிக்கப் படுகிறது.இது தவிர, சென்னை, வேலூர்,

பெங்களூரு ஆகிய இடங்களுக்கும் அரிசி மூட்டைகள் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. மாவட்டத்தில், போதிய மழை இல்லாத தாலும், கோடை காலம் என்பதாலும் விவசாயிகள் நெல் பயிர் செய்யவில்லை.

தற்போது, கிணற்றில் தண்ணீர் இருக்கும் விவசாயிகள் கூட நெல் பயிருக்கு மாற்றாக, கரும்பு, வேர்க்கடலை, சவுக்கு போன்ற பயிர்கள் செய்துள்ளனர். இதற்கு காரணம், ஒரு நாளைக்கு, மூன்று மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் மாற்றுப் பயிர் செய்கின்றனர்.

நெல்வரத்து குறைவு

கடந்த, சில மாதங்களாகவே ஆலைக்கு வரும் நெல் வரத்து, நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது.

இது குறித்து, திருத்தணி அரிசி ஆலை உரிமையாளர் சித்தரஞ்சன் கூறுகையில், ""தமிழகத்தில் நெல் இல்லாவிட்டாலும், ஆந்திராவில் இருந்து வரவழைத்து அரைப்போம். தற்போது ஆந்திராவில் இருந்தும் நெல்வரத்து இல்லை. கடந்த மூன்று மாதங்களாக, ஆந்திராவில் இருந்து வரும் நெல்லும் சுத்தமாக நின்றுவிட்டது. அங்கும் போதிய மழை மற்றும் மின்வெட்டால் நெல் விளைச்சல் குறைந்துள்ளது," என்றார்.

மேலும்,""இரண்டு மாதத்திற்கு முன்பு, ஒரு நாளைக்கு, 150 மூட்டை நெல் அரவை செய்யப்பட்டது. தற்போது, நெல்வரத்து குறைவால், 75 முதல், 100 மூட்டை தான் அரவை செய்ய முடிகிறது. வரும் நவம்பர், டிசம்பர் மாதத்தில் தான்
நெல் வரத்து அதிகரிக்கும்" என்றார்.

நெல்வரத்து குறைந்து விட்டதால், அரிசி விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து, கடந்த ஒரு மாதத்தில் மட்டும், 25 கிலோ மூட்டைக்கு, 200 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இந்த திடீர் விலை உயர்வால், நுகர்வோர் அதிர்ச்சி அடைந்து உள்ளனர்.

நெல் கொள்முதல் விலை

(82 கிலோ மூட்டை)

நெல் ரகம் மார்ச் ஜூன்

2013 2013

வெள்ளை

பொன்னி 1500 1800

சூப்பர்

பொன்னி 1100 1200

பாபட்லா

பொன்னி 1400 1700

சோனா மசூரா 1100 1600

ஏ.டி.டி., 37 1100 1150

ஏ.டி.டி., 45 1100 1100

ஏ.டி.டி., 39 1000 1150

அரிசி விலை

(25 கிலோ மூட்டை)

அரிசி ரகம் மார்ச் ஜூன்

2013 2013

வெள்ளை

பொன்னி 900 1100

சூப்பர்

பொன்னி 700 750

பாபட்லா

பொன்னி 600 650

சோனா மசூரா 650 850

ஏ.டி.டி., 37 580 650

ஏ.டி.டி., 45 600 620

ஏ.டி.டி., 39 500 600

## பருப்பு விலை அதிகரிப்பு ஏன்?

கோவையில், துவரம் பருப்பு உள்ளிட்டபருப்பு வகைகளின் விலை அதிகரித்துள்ளது; கடுகு, புளி விலை குறைந்துள்ளது.வீட்டுச் சமையலறையில் காய்கறிகளுடன் முக்கிய இடம் பிடிப்பது புளி, பருப்பு,தானியம், எண்ணெய் வகைகள். இவைஒவ்வொன்றும், ஒவ்வொரு பருவ காலத்தில் விளைபவை. புளி, சீரகம், வெந்தயம்,கடுகு, சுக்கு, குறுமிளகு, மிளகாய் வற்றல்ஆகியவை, ஆண்டுக்கு ஒருமுறை அறுவடையாகின்றன. பொள்ளாச்சி, சேலம், ஆந்திரா மாநிலத்தின் இந்துப்பூரில் விளையும்புளி, கோவைக்கு வருகிறது.குறுமிளகுவகைகள், கேரள மாநிலத்தில் இருந்தும், மைசூர், நீலகிரி, கன்னியாகுமரிமாவட்டங்களில் இருந்து விற்பனைக்கு வருகின்றன.

மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கடுகு வரத்து இருக்கும். குஜராத்,ராஜஸ்தான், மத்தியப் பிரதேசத்தில்இருந்துகோவைக்கு வருகிறது.குஜராத் மாநிலத்திலுள்ள ஒழுங்குமுறைசந்தை தான், இந்தியாவின் மிகப்பெரியசந்தை. இங்கு அனைத்து விவசாய விளை பொருட்களின் விலை நிலவரத்தையும்அறியமுடியும்.எல்லா மாநிலத்தின் விளை பொருட்களும் விற்பனைக்கு வரும். சீரகம் இங்கிருந்துதான், அனைத்து பகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது. கோவைக்குஆண்டுக்கு சராரியாக 400 டன் வரை சீரகம், வருகிறது.

விலை நிலவரம் குறித்து, கோவைமளிகை வியாபாரிகள் சங்கச் செயலாளர் பாஸ்கரன் கூறியதாவது:கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, சிலபருப்பு வகைகளின் விலை அதிகரித்துள்ளது. மின்கட்டணம், லாரி வாடகை,சுங்கம், ஏற்றுக்கூலி, இறக்கு கூலி போன்றவை உயர்ந்து விட்டன. இதன் காரணமாகத்தான், பருப்புவகைகளின்விலையும் ஏற்றம் கண்டது. விவசாய விளை பொருட்களின் விலை எவ்வளவு வேகமாக உயர்கிறதோ, அதே வேகத்தில் குறையவும் துவங்கும். ஆலை தயாரிப்புப் பொருட்களின்விலைவேண்டுமானால், அப்படியேநிலைத்து நிற்க வாய்ப்புண்டு.விவசாயத்தில், கலப்பின உயர்ரக விதைகள் வந்துகொண்டே இருப்பதால், விவசாயிகள்அவற்றைஅறிந்து பயன்படுத்துகின்றனர். அதனால், இந்த பருவத்தில்தான் இதுவிளையும் என்ற நிலைஇல்லை.உதாரணத்திற்கு, மிளகாய் வற்றல், ஆண்டுதோறும்ஏதாவது ஒரு பகுதியில் இருந்து, விற்பனைக்குவந்துகொண்டேஉள்ளது.நவீன யுக்திகளை பயன்படுத்தும்போது,சில இடங்களில் விளைச்சல் அதிகரிக்கிறது. அதனால் வரத்து கூடுகிறது; விலைகுறைகிறது.புதுக்கோட்டையில், காட்டுப்பயிரான எள்விளைச்சல்அதிகரித்ததால்,எண்ணெய்விலையில் சரிவு ஏற்பட்டது. ஒரே நேரத்தில் பலரும் மாற்றுப்பயிராக எள்ளைப் பயிரிட்டதால், மூன்று முதல் நான்கு மடங்குவரை அதன் உற்பத்தி அதிகரித்தது. தஞ்சாவூரில் பாசிப்பயிர் குறைவாக பயிரிட்டதால், அதன் உற்பத்தி குறைந்து, விலை ஏற்றம் பெற்றது.மல்லி பயிரிட்டவர்களில் பலர், இன்றுஆமணக்கு, பருத்தி என மாற்றுப் பயிருக்குபோய்விட்டார்கள்.

இதனால், இதன்விலை அதிகரித்தது.தானியப் பயிரான கொள்ளு பற்றியவிழிப்புணர்வு மக்களிடம் அதிகரித்துவிட்டது.இதனால், கொள்ளு பயன்பாடு அதிகரித்து, தேவையும் அதிகரித்து வருகிறது.வானம் பார்த்த பூமி, தரிசு நிலங்களில் விளையும் ராகி, கம்பு, கேழ்வரகு, சோளம்ஆகிய சிறுதானியப் பயிர்கள்அதிக சத்துகள் கொண்டவை. இயற்கையின் வரப்பிரசாத மான இவற்றை, பயன்படுத்தினால், அதிகநன்மைகள் கிடைக்கும்.தற்போதைய மொத்த விலையில்,பருவநிலை மாற்றத்தால், 5 சதவீதம்கூடவோ, குறையவோ வாய்ப்பு உண்டு.இவ்வாறு, பாஸ்கரன் கூறினார்.

**ஏன்?**

மின்கட்டண ம்,லாரிவாடகை,சுங்கம்,ஏற்றுக்கூலி, இறக்குகூலிபோன்றவை உயர்ந்துவிட்டன. இதன் காரணமாகத்தான், பருப்பு வகைகளின்விலையும் ஏற்றம்கண்டது . விவசாயவிளை பொருட்களின்விலை எவ்வளவு வேகமாக உயர்கிறதோ,அதேவேகத்தில் குறையவும் துவங்கும். ஆலை தயாரிப்புப்பொருட்களின் விலை வேண்டுமானால், அப்படியே நிலைத்து நிற்க வாய்ப்புண்டும

## "விவசாயிகள் அடையாள அட்டையை வியாபாரிகளுக்கு வழங்கக்கூடாது'

பொள்ளாச்சி:""விவசாயிகளின் அடையாள அட்டையை வியாபாரிகளுக்கு வழங்குவது தண்டனைக்குரிய செயல்," என கோவை கலெக்டர் கருணாகரன் பேசினார்.
பொள்ளாச்சி அடுத்த நல்லூரில், வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை கொள்முதல் நிலைய துவக்க விழா நடந்தது. வேளாண்துறை அமைச்சர் தாமோதரன் துவக்கி வைத்தார். துணை சபாநாயகர் ஜெயராமன் தலைமை வகித்தார். கோவை மாவட்ட கலெக்டர் கருணாகரன் மற்றும் எம்.பி., சுகுமார் முன்னிலை வகித்தனர்.
கலெக்டர் கருணாகரன்
பேசியதாவது: கடந்தாண்டு, விவசாயிகளின் நலன் கருதி ஏழு இடங்களில் கொப்பரை கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இந்தாண்டும் ஏழு இடங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
விவசாயிகள் அதிகளவில் கொப்பரை கொள்முதல் செய்ய வேண்டும்.
இத்துடன் விவசாய அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் உடனடியாக விண்ணப்பித்து பெற வேண்டும். கடந்தாண்டு அடையாள
அட்டைகளை புதுப்பிக்க வேண்டும். அடையாள அட்டைகளை வியாபாரிகளிடம் கொடுத்தால் அரசின் திட்டங்கள் வீணாகும் நிலையுள்ளது. அதனால், விவசாயிகள் தங்களது அட்டைகளை வேறு வியாபாரிகளுக்கு வழங்கக்கூடாது. இவ்வாறு, கலெக்டர் பேசினார்.
விழாவில், துணை சபாநாயகர் ஜெயராமன் பேசுகையில்,
""தேங்காய் எண்ணெயில் அதிக கொழுப்புச்சத்து இருக்கிறது என வியாபார நோக்கத்துக்காக சிலர் வதந்திகளை கிளப்பி வருகின்றனர். ஆனால், மத்திய தென்னை ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆய்வில் தேங்காய் எண்ணெயில் உள்ள கொழுப்பு சத்து மனிதனுக்கு மிகவும் நன்மை பயக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து ரேஷன் கடைகளிலும் பாமாயிலுக்கு மாற்றாக தேங்காய் எண்ணெய் வினியோகிக்க வேண்டும் என முதல்வரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது," என்றார்.

தமிழக வேளாண் அமைச்சர் தாமோதரன் பேசியதாவது:
கொப்பரை கொள்முதலை மத்திய அரசு இடையில் நிறுத்தி வைத்தது. இதை முதல்வரின் கவனத்துக்கு எடுத்து சென்றதின் பேரில் தற்போது புதிய கொப்பரை கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்தாண்டு 30 ஆயிரம் மெட்ரிக் டன் கொப்பரை ரூ.153 கோடிக்கு கொள்முதல் செய்யப்பட்டது. விரைவில் கோவையில் இளநீர் ஏற்றுமதி மையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
கொப்பரை கொள்முதல் செய்யும் விவசாயிகளுக்கு, தற்போது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பணம் வழங்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். 10-15 நாட்களுக்கு ஒரு முறை தொகை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
இவ்வாறு அமைச்சர் பேசினார்.
விவசாயிகளுக்கு கொப்பரை கொள்முதல் தொகையினை அமைச்சர் வழங்கினார். எம்.எல்.ஏ., முத்துக்கருப்பண்ணசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராமமூர்த்தி, வேளாண் இணை இயக்குனர் லட்சுமி ராஜ், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்துக்குழு தலைவர் செல்விபத்மினி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ராதாமணி உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

01.06.2013 A.M

## நுகர்வோர் பண்டக சாலைகளில் குறைந்த விலையில் பருப்பு விற்பனை செய்ய உத்தரவு



சென்னை : நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகளின் செயல்பாடுகள் குறித்தும், 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி விற்பனை செய்வது குறித்த ஆய்வு கூட்டம் கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜு தலைமையில் நேற்று நடந்தது. நுகர்வோர் பாதுகாப்பு துறை செயலாளர் நிர்மலா முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் அமைச்சர் செல்லூர் ராஜு பேசும்போது, "தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ள 20 ரூபாய்க்கு ஒரு கிலோ தரமான அரிசி வழங்கும் திட்டத்தை செம்மையான முறையில் வழங்க வேண்டும். மேலும் மாவட்ட அரசு நுகர்வோர் மொத்த விற்பனை பண்டக சாலைகளில், விலை கட்டுப்படுத்தும் நிதியை பயன்படுத்தி உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, மைதா, சமையல் எண்ணெய் போன்ற மக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களை வாங்கி வெளிச்சந்தையைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டும்" என்றார். கூட்டத்தில்

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் பெ.சீத்தாராமன், கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) கலையரசி மற்றும் பண்டகசாலை உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
01.06.2013 A.M


## திண்டிவனம் பகுதியில் கடும் வறட்சியால் சவுக்கு மரங்கள் கருகின விவசாயிகள் கவலை

திண்டிவனம்,

திண்டிவனம் பகுதியில் கடும் வறட்சியால் சவுக்கு மரங்கள் கருகியதால் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

### வறட்சி

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், ஒலக்கூர், மயிலம், பிரம்மசேதம் மற்றும் அதனை சுற்றியுள்ள வருகாப் பட்டு, கொளசூர், ஆலங்குப்பம், நடுவனந்தல், புளியனூர், தனியல் உள்பட சுமார் 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவில் சவுக்கு பயிர் செய்துள்ளனர். இந்த மரங்கள் நன்கு செழித்து வளர்ந்து வந்தன. இந்த நிலையில் மழையின் மையால் திண்டிவனம் பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் சவுக்கு மரங்களுக்கு தேவையான தண்ணீரை விவசாயிகளால் பாய்ச்ச முடியவில்லை,

### சவுக்கு மரங்கள் காய்ந்தது

இதன் காரணமாக பல்வேறு இடங்களில் பயிரிடப்பட் டுள்ள சவுக்கு மரங்கள் காய்ந்து கருகி வருகின்றன.இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது. நாங்கள் கடந்த 1 வருடத்திற்கு முன்பு சவுக்கு மரத்தினை பயிர் செய்தோம். நல்ல முறையில் சவுக்கு வளர்ந்து வந்த நிலையில் பருவமழையானது சரிவர பெய்யவில்லை. இதனால் எங்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட் டது. கடந்த காலங்களில் டிசம்பர் மாதத்தில் பெய்யக் கூடிய பருவ மழையானது சரிவர பெய்யவில்லை .

### மழை இல்லை

அந்த மழையானது ஏப்ரல் மாதத்தில் மீண்டும் பெய்யும். அதன் மூலம் தண்ணீர் தட்டுப்பாடு நீங்குவது வழக் கம். ஆனால் நடப் பாண்டில் மழை ஏதும் பெய்ய வில்லை. இதனால் தண்ணீர் தட்டுப் பாடு மேலும் அதிகரித் துள்ள தால் சவுக்கு மரங்களுக்கு தேவையான தண்ணீரை எங் களால் பாய்ச்சமுடிய வில்லை.

விவசாயிகளுக்கு நஷ்டம்

கடந்த 2 மாதங்களுக்கு மேலாக சவுக்கு மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சாததால் மரங்கள் அனைத்தும் காய்ந்து கருகி வருகின்றன. இதன் மூலம் என்னை போன்ற பல விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக சவுக்கு மரங்கள் ஓரளவுக்கு வறட்சியை தாங்ககூடிய பயிர்தான். இருப்பினும் தற்போது நிலவி வரும் கடுமையான வறட்சியால் அவை கருகிவருகின்றன. இதை போன்று எங்கள் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெல், கரும்பு,வாழை உள்ளிட்ட பயிர்களும் தண்ணீர் இன்றி கருகி வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

## கறம்பக்குடி ஒன்றியத்தில் வளர்ச்சி பணிகளை கலெக்டர் நேரில் ஆய்வு

கறம்பக்குடி

கறம்பக்குடி ஒன்றியத்தில் நடந்து வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை கலெக்டர் மனோகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**வளர்ச்சி பணிகள் ஆய்வு**

கறம்பக்குடி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளை மாவட்ட கலெக்டர் மனோகரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய் தார். அப்போது ஆண்டிக் கோன்பட்டி ஊராட்சியில் அமைக்கப்பட்டிருந்த ஊரா ட்சி மின் மோட்டார் சரியாக இயங்குகிறதா என்பதையும், களபம் கிராமத்திலும் மற் றும் நரியங்கொல்லை கிராமத் திலும் முதல் அமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் தரமாக கட்டப் பட்டுள்ளதா என்பதையும் அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

களபம் பஸ் நிறுத்த நிழற் குடையில் பழுது நீக்கம் செய்து புதுப்பிக்க சம்பந்தப் பட்ட அலுவலர்களுக்கு அவர் உத்தரவிட்டார். பின்னர் வேளாண்மை துறையின் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகாமையின் சார்பில் இலுப்பக்குளம் புதிய ஊரணி மற்றும் சின்ன சாமி ஊரணி, ஓடைக் குளம் ஆழப்படுத்தும் பணி, பண்ணைக்குட்டை அமைக் கும் பணி,

திருமணஞ்சேரி ஊராட்சியில் ஸ்ரீசுகந்த பரிமளேஸ்வரர் கோவிலில் திருக்குளம் ஆழப்படுத்தி, சுற்றுச்சுவர் அமைக்கும் பணி ஆகியவற்றை பார்வையிட் டார்.

**கணினி பயிற்சி**

மேலும் கறம்பக்குடியில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் 59 பெண்களுக்கு கணினி மூலம் சமூக கணக்குப் பதிவு பயிற்சி அளிக்கப்படு வதை அவர் பார்வையிட்டார். அப்போது, பெண்கள் கணினி பயிற்சி பெறுவதன் மூலம் கிராமத்தின் வளர்ச் சிக்கும், சமுதாய முன்னேற்றத் திற்கும் உதவியாக திகழ முடியும் என்று கூறி னார். ஆய்வின்போது ஒன்றியக்குழு தலைவர் கெங்கையம்மாள் சொக்கலிங்கம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரமேஷ், செல்வராஜ், வேளாண்மை துணை இயக்குனர் ஜெயக் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நலத்திட்ட உதவிகள்**

இதற்கிடையே மாங் கோட்டை ஊராட்சி கீழப் பட்டியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அம்மா திட்டத்தின்படி வருவாய்த்துறை முகாமை பார்வையிட்டு கலெக்டர் பேசினார். முகாமில் 35 பேருக்கு முதியோர் உதவித் தொகை ரூ.1,000 பெறுவதற் கான உத்தரவுகளையும், 7 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் உத்தரவுகளையும், 47 பயனாளிகளுக்கு ரேசன் கார்டுகளில் திருத்தங்கள் செய் தும், ஒரு பயனாளிக்கு விபத்து நிவாரண உதவித் தொகை ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 500ம் என நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

முகாமில் கார்த்திக் தொண்டைமான்எம்.எல்.ஏ., ஒன்றியக்குழு தலைவர் கெங்கையம்மாள் சொக்க லிங்கம், நிலவள வங்கி தலைவர் சண்முகம், ஊராட்சி தலைவர் பன்னீர்செல்வம், தாசில்தார் காமாட்சி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூரில், அட்டைப்பெட்டி தொழில் விழிப்புணர்வு கண்காட்சி வெளிநாட்டு எந்திரங்கள் அறிமுகம்

திருப்பூர்,

திருப்பூரில் நேற்று நடை பெற்ற அட்டைப்பெட்டி தயாரிப்பு தொழில் விழிப் புணர்வு கண்காட்சியில் ஏராளமான வெளி நாட்டு எந்திரங்கள் அறி முகம் செய்யப்பட்டன.

கண்காட்சி

தென்னிந்திய அட்டைப் பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கமும், சென்னை மோகன் இண்டஸ்ட்ரியல் மெஷின் டூல்ஸ் நிறுவனமும் இணைந்து திருப்பூரில் நேற்று அட்டைப் பெட்டி தொழில் விழிப் புணர்வு கண்காட்சியை நடத் தின.திருப்பூர் தெற்கு ரோட் டரி அரங்கத்தில் நடைபெற்ற இந்த கண்காட்சியை தென் னிந்திய அட்டைப்பெட்டி உற்பத்தி யாளர்கள் சங்க முன்னாள் தலைவர் கோபால கிருஷ்ணன் தொடங்கி வைத் தார். சென்னை மோகன் இண் டஸ்ட்ரீஸ் நிறுவன உரிமை யாளர் எம்.அழகேசன், தென் னிந்திய அட்டைப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்க தலை வர் ராதாகிருஷ்ணன், செய லாளர் சிவகுமார் ஆகியோர் குத்துவிளக்கேற்றினர்.

<u>வெளிநாட்டு எந்திரங்கள்</u>

இந்த கண்காட்சியில் கோவை, திருப்பூர், மும்பை, புதுடெல்லி, கோபி செட்டி பாளையம், சென்னை உள் ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் அட்டைப்பெட்டி தயாரிப்பு மற்றும் சார்பு நிறுவனங்களின் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. அட்டைப்பெட்டி தயா ரிக்க உதவும் காகிதம், அட்டை, பசைமாவு, ஹீட்டிங் எந்திரம், பேக்கிங் எந்திரம், சோலார் பொருட்கள், அட்டை பெட்டி மூலப் பொருட்களை தூக்கும் கன ரக எந்திரங்கள் என பல்வேறு பொருட்களும், அட்டைப்பெட்டி தயாரிக்க உதவும் சுவிட்சர்லாந்து எந் திரங்களும், தென் கொரியா, ஜப் பான் நாட்டு எந்திரங்களும் இந்த கண்காட்சியில் அறிமு கம் செய்யப்பட்டு செய்முறை விளக்கம் தரப்பட்டன.

<u>கலந்தாய்வு கூட்டம்</u>

மாலையில் நடைபெற்ற அட்டைப்பெட்டி தயாரிப்பா ளர்களுக்கான கலந்தாய்வு கூட்டத்துக்கு தென்னிந்திய கிராப்ட் பேப்பர் தயாரிப் பாளர்கள் சங்க தலைவரும், ஸ்ரீபதி பேப்பர் போர்ட் நிறு வனருமான கே.ஆர்.கிருஷ்ண சாமி தலைமை தாங்கினார். இதில் அட்டைப்பெட்டி தொழிலில் உள்ள சிறப்பம்சங் கள், தொழில் தொடங்க கடன் உதவி, ஆலோசனை, மூலப் பொருட்களை வாங்கும் தொழில் நுட்பம், அட்டைப் பெட்டி தொழிலை நடத்து வதற்கான வழிகாட்டல் திட் டங்கள், இறக்குமதி செய்யப் பட்ட எந்திரங்களை கையா ளும் விதம், தொழில் நுட்பக் கலைஞர்களுடன் நேரடி ஆலோசனை, நவீன எந்திரங் களை பயன்படுத்தி குறைந்த செலவில் அட்டைப்பெட்டி களை தயாரிப்பது, குறைந்த ஆட்களை கொண்டு அதிக உற்பத்தியை பெருக்குவது, சந்தையில் உள்ள சிக்கலான சவால்களை எதிர்கொள்ளும் வழிமுறைகள் உள்ளிட்ட பல் வேறு தகவல்கள் கண்காட் சியில் கலந்து கொண்டவர் களுக்கு வழங்கப்பட்டன.

இது குறித்து தென்னிந்திய அட்டைப்பெட்டி உற்பத்தி யாளர்கள் சங்க தலைவர் ராதாகிருஷ்ணன், செயலாளர் சிவகுமார் ஆகியோர் கூறு கையில், ‘அட்டைப்பெட்டி தயாரிப்பு தொழிலில் உள்ள

நவீனம் குறித்து அறிந்து கொள்ளவும், தொழில் மேம் பாட்டினை அடையவும், அட்டைப்பெட்டி தயாரிப்பு தொழிலை விரிவு படுத்தவும், அட்டைப்பெட்டி தொழிலுக் கான பாதுகாப்பை ஏற்படுத்த வும் இந்த கண்காட்சி திருப் பூரில் முதன் முறையாக நடத் தப்பட்டுள்ளது. நவீன ரக எந் திரங்களை ஏராளமானோர் ஆர்டர் செய்துள்ளனர்' என்று தெரிவித்தனர்.

## தென்மேற்கு பருவ மழையையொட்டி முன் எச்சரிக்கை நடவடிக்கை குறித்து அதிகாரிகள் ஆலோசனைக்கூட்டம் தர்மபுரி கலெக்டர் தலைமையில் நடந்தது

தர்மபுரி,

தர்மபுரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழையையொட்டி மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கை நட வடிக்கை குறித்த அதிகாரிகள் ஆலோ சனைக்கூட்டம் கலெக் டர் ஆர். லில்லி தலைமை யில் நடந்தது.

தென்மேற்கு பருவமழை

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்க உள் ளது. இதனையொட்டி மேற் கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நட வடிக்கை கள் குறித்த அதிகாரி கள் ஆலோசனைக்கூட்டம் தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கூட் டத்திற்கு கலெக்டர் ஆர்.லில்லி தலைமை தாங்கினார். கலெக்டரின் நேர்முக உதவி யாளர் ரகமத்துல்லாகான், உதவிகலெக்டர்கள் மேனகா, சந்திரசேகரன், கூட்டுறவு இணை பதிவாளர் ராமதாஸ் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலெக்டர் ஆர்.லில்லி பேசுகையில், தென்மேற்கு பருவமழையை யொட்டி தர்மபுரி மாவட்டத் தில் உள்ள அனைத்து அலு வலர்களும் தங்கள் துறை சம்பந்தமாக பேரிடர் மேலாண்மை திட்டம் குறித் தும் தங்கள் துறை அலுவலர் களின் முகவரி மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி, செல்போன் எண்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர்களை தடுக்கும் வகை யில் இயற்கை இடர்பாடுகளை உடனுக்குடன் மாவட்ட நிர் வாகத்திற்கும், அரசுக்கும் தெரியப்படுத்தும் வகையில் மாவட்ட கலெக்டர் அலுவல கத்தில் கட்டுபாட்டுஅறை அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டுஅறைக்கு நாள் முழுவதும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077 வழங்கப்பட்டுள்ளது.

மாதிரி ஒத்திகை

பொதுமக்களும், அலுவலர் களும், இந்த தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரிய விவரங்களை தெரிவிக்கலாம். பருவமழை காலங்களில் ஏற்படும் நிகழ்வுகளில் இருந்து பாதுகாத்து கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கை மாதிரி ஒத்திகை பொதுமக்கள் கூடும் இடங்களில் நடத்தி காட்ட வேண்டும். மேலும் பருவமழை காலங்களின் போது அதிக பாதிப்பு ஏற்படும் இடங்கள் நிவாரண மையங் கள், தானாக முன்வந்து உதவக் கூடிய அமைப்புகள் ஆகியவற் றின் விவரங்களை தயார்செய்ய வேண்டும்.

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள நீர்த்தேக்கங்கள், ஏரி களில் தண்ணீர் நிரம்பும் தரு ணத்தில் உபரிநீர் வெளியேறக் கூடிய சூழ்நிலை வரும்போது அதனை முன்கூட்டியே பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும். தாழ்வான இடத் தில் வசிப்பவர்களை மேடான பகுதிகளில் தங்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வெள்ளம் வரும் இடங்களில் பயன்படுத்த தேவையான மணல்மூட்டைகளை தயார் நிலையில் வைக்க வேண்டும். பருவமழை காலங்களில் அனைத்து அரசு அலுவலர் களும் அவர்களுடைய தலை மையிடத்தில் தங்கி பணியாற்ற வேண்டும். இவ்வாறு கலெக்டர் ஆர்.லில்லி கூறினார்.